**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.53/2025 - PW- 10**

| | |
|---|---|
| Name | செல்வி.குணலட்சுமி |
| Father Name | பாலகிருஷ்ணன் |
| Village /Area | கிழவனம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | |
| Age | 16 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 30.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். சாட்சி இளவர் என்பதால் இந்த நீதிமன்றத்தில் கீழ்கண்ட வினாக்கள் எழுப்பபட்டது. நான் 12-ம் வகுப்பு திருத்தணி பெண்கள் உயர்நிலை பள்ளியில் படிக்கிறேன். நான் என்ன காரணத்திற்காக இந்த நீதிமன்றத்திற்கு ஆஜராகியுள்ளேன் என்ற விவரம் பற்றி எனக்கு தெரியும். நான் இந்த நீதிமன்றத்திற்கு எனது சித்தப்பா சந்திரன் கொலை செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமான சாட்சி அளிக்க வந்துள்ளேன். ஆஜர் எதிரிகள் தான் என் சித்தப்பாவை கொலை செய்தவர்கள். சாட்சியிடம் இந்த நீதிமன்றத்திற்கு என்ன காரணத்திற்காக வந்துள்ளார் என்பது பற்றி விளக்கி கூறிய பிறகு சாட்சியினுடைய முதல் விசாரணை பதிவு செய்யப்பட்டது.

கடந்த 05.09.2024 அன்று மாலை 04.30 மணிக்கு என் சித்தப்பா சந்திரன் வேலை செய்த கூலிப் பணத்தை வாங்குவதற்காக

பி.என்.கண்டிகைக்கு சென்று திரும்பி வரும் போது கீதா மற்றும் அவரது மகன் ஆகாஷும் என் சித்தப்பா சந்திரனை மடக்கி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி சண்டை போட்டார்கள். இந்த சம்பவத்தை என் தங்கையான கவிதா என்னுடைய வீட்டிற்கு ஓடி வந்து என் அப்பா, அம்மாவிடம் சொன்னார் அவர்களுடன் நானும் சம்பவ இடம் ஓடி சென்று பார்த்தேன்.

அப்போது எத்திராஜ் என்பவர் அவர் வீட்டில் இருந்து கத்தியை எடுத்து வந்து இடது உள்ளங்கையின் மீது வெட்டினார். பிறகு என் சித்தப்பா சந்திரனின் பின் தலையின் மீதும் வெட்டினார். பிறகு என் சித்தப்பா மயங்கி கீழே விழுந்து விட்டார். அப்போது சுப்பிரமணி என்னடா நடிக்கீறியாடா என்று கூறி கல்லை தூக்கி என் சித்தப்பா சந்திரனின் தலையின் மீது போட்டார்.

பிறகு சரவணன் என்பவர் எத்திராஜ் கையில் இருந்த கத்தியை பிடிங்கி என் சித்தப்பா சந்திரனின் பின்னந்தலையில் வெட்டினார். மறுபடியும் சரவணன் சுப்பிரமணி போட்ட அதே கல்லை எடுத்து என் சித்தப்பா சந்திரனின் தலையில் போட்டார். பிறகு சுப்பிரமணி அதே கல்லை எடுத்து என் சித்தப்பாவின் கை மற்றும் காலின் மீது போட்டார். பிறகு 108 ஆம்புலன்சிற்கு தகவல் கொடுத்து திருத்தணி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதனை செய்த மருத்துவர் இரவு 08.30 மணிக்கு என் சித்தப்பா சந்திரன் இறந்து விட்டதாக தெரிவித்தார்.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தி தான் எதிரி எத்திராஜ் மற்றும் சரவணன் என் சித்தப்பா தலையில் வெட்ட பயன்படுத்திய கத்தியாகும் அது ஏற்கனவே சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும்

கல்லால் தான் எதிரி சுப்பிரமணி என் சித்தப்பா தலையில் தூக்கி போட்டு கொலை செய்தார். அது ஏற்கனவே சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்மந்தமாக அரக்கோணம் கிராமிய காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.30 19:05:24 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.